# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள் : 90

பகுதி - I

20×1=20

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-

1) முழுமை பெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம்                                    ஆ) அரசு
   இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்    ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

2) நிலை அறிக்கை ஒரு
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை    ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு    ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

3) கடன் விற்பனை தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்த கடனாளிகள் கணக்கு    ஆ) மொத்த கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு    ஈ) செலுத்தற்குரிய மாற்றுசீட்டுக் கணக்கு

4) உரிமையாளரின் சொத்துகள் ரூ.85,000 மற்றும் பொறுப்புகள் ரூ.21,000 எனில் அவருடைய முதல் தொகை
   அ) ரூ.85,000    ஆ) ரூ.1,06,000    இ) ரூ.21,000    ஈ) ரூ.64,000

5) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவுக் கணக்கு    ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு    ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

6) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம்    ஈ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை    ஈ) நிதிநிலை

7) உயில்கொடை ஒரு
   அ) வருவாயினச் செலவு ஆ) முதலினச் செலவு    இ) வருவாயின வரவு    ஈ) முதலின வரவு

8) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
   அ) வருவாயின வரவு    ஆ) முதலின வரவு    இ) வருவாயினச் செலவு    ஈ) முதலினச் செலவு

9) கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி
   அ) வழங்கப்படுவதில்லை    ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
   இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும்    ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

10) பின்வருவனவற்றில் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்
   அ) அலுவலகச் செலவுகள்    ஆ) பணியாளர் ஊதியம்
   இ) கூட்டாளியின் ஊதியம்    ஈ) வங்கிக் கடன் மீதான வட்டி

11) பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
   அ) எடுப்பு மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
   இ) கடன் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஈ) இலாபப் பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

12) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
   அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து    ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
   இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து    ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

13) கீழ்வருவனவற்றில் எது சரியானது?

அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்

14) சராசரி இலாபம் ரூ.25,000 மற்றும் சாதாரண இலாபம் ரூ.15,000 ஆக இருக்கும்போது, உயர் இலாபம்

அ) ரூ.25,000 ஆ) ரூ. 5,000 இ) ரூ.10,000 ஈ) ரூ.15,000

15) மறுமதிப்பீட்டு கணக்கு ஒரு

அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாரா க/கு

16) மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது

அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றில் எதுவுமில்லை

17) பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.

அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்

இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

18) கூட்டாளி விலகலின் போது பொதுகாப்பு மாற்றப்படுவது

அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கு ஆ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு

இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கு ஈ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

19) மறுமதிப்பீட்டின் போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது

அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

20) A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்

அ) 4:3 ஆ) 3:4 இ) 2:1 ஈ) 1:2

## பகுதி - II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றின் வினா எண். 30-க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7×2=14

21) நிலை அறிக்கை என்றால் என்ன?

22) உயில் கொடை என்றால் என்ன?

23) கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்?

24) பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.

அ) சொத்தின் மீதான தேய்மானம் ஆ) பதிவுறா பொறுப்புகள்

இ) கொடுபட வேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்

25) கூட்டாளி விலகல் என்றால் என்ன?

26) பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| | |
|---|---|
| 31.03.2018 அன்று முதல் | 80,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| 01.04.2017 அன்று தொடக்க முதல் | ? |
| 31.03.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம் | 25,000 |

27) பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்

| | |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 16,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருட்கள் | 84,000 |
| 31.03.2019 அன்று விளையாட்டுப் பொருட்கள் இருப்பு | 10,000 |

28) 2018 ஆம் ஆண்டில் இராஜன் என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ரூ.30,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என விதிக்கப்பட்டது. 2018, டிசம்பர் 31 அன்றைய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

29) அன்பு மற்றும் இராஜி என்ற இரு கூட்டாளிகள் 3:2 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அக்ஷய் என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அன்பு, இராஜி மற்றும் அக்ஷய் அவர்களின் புதிய இலாபப் பங்கு 5:3:2 தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

30) பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.
2016: Rs. 8,000 ; 2017: Rs.10,000 ; 2018: Rs.9,000

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றின் வினா எண். 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7×3=21

31) பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனை காணவும்.

| | ரூ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள்திருப்பம் | 25,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

32) இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

33) கீழ்காணும் பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் கணக்கு மற்றும் கூடுதல் தகவல்களிலிருந்து 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தாத் தொகையினைக் கணக்கிடவும்.

| பெறுதல்கள் | ரூ. | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| சந்தா | | | | |
| 2017 | 28,000 | | | |
| 2018 | 1,72,000 | | | |
| 2019 | 12,000 | 2,12,000 | | |

கூடுதல் தகவல்கள் 2018 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ரூ.8000

34) காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டு போட்டி நிதி | 90,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டு போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 60,000 |

35) நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

36) சந்தோஷ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு

| நாள் | ரூ. |
|---|---|
| பிப்ரவரி 1 | 2,000 |
| மே 1 | 10,000 |
| ஜூலை 1 | 4,000 |
| அக்டோபர் 1 | 6,000 |

பெருக்குத் தொகை முறையை பயன்படுத்தி எடுப்பு மீது வட்டி கணக்கிடவும்.

37) பின்வரும் விவரங்களிலிருந்து கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | முடிவு | தொகை ரூ. |
|---|---|---|
| 2015 | இலாபம் | 5,000 |
| 2016 | இலாபம் | 8,000 |
| 2017 | நட்டம் | 3,000 |
| 2018 | இலாபம் | 6,000 |

38) இராஜேஷ் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகளின் 3:2 என இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். இராமன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்து கொண்டனர். அவர்களது புதிய இலாப விகிதம் 5:3:2 பின்வரும் மறுமதிப்பீடுகள் செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

அ) கட்டடத்தின் மதிப்பு ரூ.15000 உயர்த்தப்பட்டது

ஆ) இயந்திரத்தின் மதிப்பு ரூ.4000 குறைக்கப்பட்டது

இ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.1000 உருவாக்கப்பட்டது.

39) தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

40) ரோஜா, நீலம் மற்றும் கனகா என்ற கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று ரோஜா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டன.

i) கட்டடத்தின் மதிப்பின் ரூ.30,000 அதிகரிக்க வேண்டும்.

ii) சரக்கிருப்பு மதிப்பில் ரூ.5000 மற்றும் அறைகலன் மதிப்பில் ரூ.12,000 குறைக்க வேண்டும்

iii) கொடுபடா பொறுப்புகளுக்கு ரூ.1000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டு பதிவு தந்து மறுமதிப்பீட்டு கணக்கினைத் தயாரிக்கவும்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) 2018 ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ரூ.1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையாக கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019 மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டின் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ரூ.30000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.40000 அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

41) ஆ) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் க/கு | | | கட்டடம் | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 30,000 |
| இலாப நட்ட க/கு | | 24,000 | வங்கி | 19,000 |
| | | 1,74,000 | | 1,74,000 |

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ரூ.30,000 முதலுடன் எதிர்கால இலாபப் பங்கில் $\frac{1}{3}$ விகிதத்தில் பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.

அ) சரக்கிருப்பின் மதிப்பு ரூ.5,000 குறைக்கப்பட வேண்டும்

ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.3000 உருவாக்கப்பட வேண்டும்

இ) கட்டடம் ரூ.20000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

42) அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெ.மா.சீ மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெ.மா.சீ | 60,000 | உள்திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற |  | 2019 மார்ச் 31 அன்று பெ.மா.சீ | 90,000 |
| ரொக்கம் | 7,25,000 | 2019 மார்ச் 31 அன்று பற்பல |  |
| பெ.மா.சீ. ரொக்கம் பெற்றது | 1,60,000 | கடனாளிகள் | 2,40,000 |
| வாராக் கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

*(அல்லது)*

ஆ) அருள் வணிக நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

அ) டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018ன் இலாபங்கள் முறையே ரூ.46,000, ரூ.44,000 மற்றும் ரூ.50,000

ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.5,000 சேர்ந்துள்ளது.

இ) 2017 ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ரூ.10,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

43) அ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|---|
| வங்கிமேல்வரைப்பற்று 1.4.2018 | | 6,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| கைரொக்கம் | | 1,000 | நீர் மற்றும் மின்சார கட்டணம் | 700 |
| மைதான பராமரிப்பிற்காக | | | விளையாட்டு போட்டி செலவுகள் | 2,600 |
| கூலி செலுத்தியது | | 2,000 | விளையாட்டு பொருட்கள் வாங்கியது | 1,900 |
| சந்தா பெற்றது | | | விளையாட்டுப் போட்டி நிதிவரவுகள் | 5,200 |
| முந்தை ஆண்டு | 500 | | உயில் கொடைப் பெற்றது | 2,000 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | ரொக்கம் இருப்பு 31.03.2019 | 300 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | அரங்கம் அமைப்பதற்காக | |
| கடன் மீதான வட்டி செலுத்தியது | | 2,000 | பெற்ற நன்கொடை | 2,000 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த கொள்முதலைக் கணக்கிடவும்.

| | | | |
|---|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று | | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| பற்பல கடனீந்தோர் | 30,000 | ரொக்கக் கொள்முதல் | 2,25,000 |
| 2018 ஜனவரி 1 அன்று | | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செ.மா.சீட்டு | 25,000 | 31.12.2018 அன்று செ.மா.சீ | 20,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் | 1,20,000 | | |
| செ.மா.சீ. செலுத்தியது | 30,000 | | |

44) அ) பின்வரும் தகவல்களிலிருந்து பத்மினி மற்றும் பத்மா என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | பத்மினி ரூ. | பத்மா ரூ. |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 5,00,000 | 4,00,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2018-ல் இலாபப் பங்கு | 52,000 | 40,000 |
| முதல் மீது வட்டி | 30,000 | 24,000 |
| ஊதியம் | 45,000 | Nil |
| கழிவு | Nil | 21,000 |

*(அல்லது)*

44) ஆ) தினேஷ் மற்றும் சுகுமார் 2018 ஜனவரி 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். தினேஷ் ரூ.1,50,000 மற்றும் சுகுமார் ரூ.1,20,000 முதலாக கொண்டு வந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.

அ) தினேஷ் மற்றும் சுகுமார் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர வேண்டும்

ஆ) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% தரப்பட வேண்டும்

இ) எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட வேண்டியது. தினேஷ் ரூ.3,600 மற்றும் சுகுமார் ரூ.2,200

ஈ) தினேஷிற்கு சம்பளம் ஆண்டுக்கு ரூ.60,000 வழங்கப்பட வேண்டும் மற்றும்

உ) சுகுமாருக்கு தரப்பட வேண்டிய கழிவு ரூ.80,000

2018 டிசம்பர் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் வட்டி, சம்பளம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிக்கட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ.2,20,000.

இலாப நட்ட பகிர்வு கணக்கை தயாரிக்கவும்.

45) அ) வெற்றி மற்றும் இரஞ்சித் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களது 31.12.2019 நாளன்றைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு

| பொறுப்புகள் | ரூ. | | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் க/கு | | | அறைகலன் | 25,000 |
| வெற்றி | 30,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| ரஞ்சித் | 20,000 | 50,000 | கடனாளிகள் | 10,000 |
| காப்பு நிதி | | 5,000 | கைரொக்கம் | 35,000 |
| பற்பல கடனீந்தோர் | | 45,000 | இலாப நட்ட க/கு (நட்டம்) | 10,000 |
| | | 1,00,000 | | 1,00,000 |

பின்வரும் சரிக்கட்டுதலின் 01.01.2018 அன்று சூரியா என்பவர் நிறுவனத்தின் புதிய கூட்டாளியாக சேர்கிறார்.

i) சூரியா ¼ இலாபப் பங்கிற்காக ரூ.10,000 முதல் கொண்டு வருகிறார்.

ii) சரக்கிருப்பு 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது.

iii) கடனாளிகள் ரூ.7500 என மதிப்பிடப்படுகிறது.

iv) அறைகலன் மதிப்பு ரூ.40,000 என மாற்றி அமைக்கப்படுகிறது

v) கொடுபட வேண்டிய கூலி ரூ.4500 இதுவரை பதிவு செய்யப்படவில்லை

புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் நிறுவனத்தின் மறுமதிப்பீட்டு கணக்கு, முதல் கணக்கு மற்றும் இருப்புநிலை குறிப்பு தயார் செய்யவும்.

*(அல்லது)*

45) ஆ) ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

ii) பாலா ஒவ்வொரு மாதமும் ரூ.3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்பு மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால் பாலா அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

iii) ஆகாஷ் இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

iv) டேனியல் தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ரூ.10,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார்.

v) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ரூ.50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார்.

46) அ) டேவிட் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து தரப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு

| விவரம் | 1.4.2018 | 31.03.2019 |
|---|---|---|
| ரொக்கம் | 43,000 | 29,000 |
| சரக்கிருப்பு | 1,20,000 | 1,30,000 |
| பற்பல கடனாளிகள் க/கு | 84,000 | 1,14,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,05,000 | 1,02,000 |
| கடன் | 25,000 | 20,000 |
| வணிக வளாகம் | 2,50,000 | 2,50,000 |
| அறைகலன் | 33,000 | 45,000 |

அவ்வாண்டில் அவர் கூடுதல் முதல் ரூ.65,000 கொண்டு வந்தார். தன்னுடைய வியாபாரத்திலிருந்து சொந்த பயனுக்காக ரூ.2500 ஒவ்வொரு மாதமும் எடுத்து கொண்டார். மேற்கண்ட விவரங்களைக் கொண்டு இலாப நட்ட அறிக்கை தயார் செய்க. ***(அல்லது)***

ஆ) மணி, ரமா, தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். தங்கள் இலாப நட்டங்கள் முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் க/கு | | | கட்டடம் | 80,000 |
| மணி | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| ரமா | 50,000 | | அறைகலன் | 70,000 |
| தேவன் | 50,000 | 1,50,000 | கடனாளிகள் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | | 20,000 | கைரொக்கம் | 10,000 |
| இலாப நட்ட க/கு | | 30,000 | | |
| | | 2,00,000 | | 2,00,000 |

பின்வரும் சரிக்கட்டுதல்களுக்கு மணி 31.03.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

i) சரக்கிருப்பு ரூ.5000 மதிப்பு குறைக்க வேண்டும்.

ii) வாரா ஐயக்கடனுக்கு ரூ.1000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

iii) கட்டத்தின் மதிப்பு ரூ.16,000 அதிகரிக்க வேண்டும்.

iv) மணிக்கு சேர வேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை

மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் கூட்டாளி விலகலுக்குப் பின் உள்ள கணக்கினைத் தயாரிக்கவும்

47) அ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கு 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வருவாய் செலவின கணக்கை தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | Rs. | செலுத்தல்கள் | Rs. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | சம்பளம் | 20,000 |
| கைரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டி பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுதுப்பொருள் | 6,000 |
| உயில் கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் | |
| அறைகலன் விற்றது | 16,000 | வாங்கியது | 33,000 |
| (ஏட்டு மதிப்பு ரூ.17,000) | | இருப்பு க/கு கைரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

*(அல்லது)*

ஆ) சுந்தர், விவேக் மற்றும் பாண்டியன் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2:1 என்ற விகிதங்களை பகிர்ந்து கொண்டனர். அவர்களின் 2018 டிசம்பர் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் க/கு | | | நிலம் | 80,000 |
| சுந்தர் | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| விவேக் | 40,000 | | கடனாளிகள் | 30,000 |
| பாண்டியன் | 10,000 | 1,00,000 | வங்கி ரொக்கம் | 14,000 |
| பொது காப்பு | | 36,000 | இலாப நட்ட க/கு | |
| பற்பல கடனீந்தோர் | | 14,000 | (நட்டம்) | 6,000 |
| | | 1,50,000 | | 1,50,000 |

1.1.2019 அன்று பாண்டியன் இறந்து விட்டார் மற்றும் அவரின் இறப்பின் போது பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

i) சரக்கிருப்பின் மதிப்பு 10% தேய்மானம் குறைக்கப்பட வேண்டும்

ii) நிலத்தின் மதிப்பு ரூ.11,000 அதிகரிக்க வேண்டும்

iii) கடனாளிகள் மதிப்பு ரூ.3,000 குறைக்க வேண்டும்

iv) பாண்டியனுக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை செலுத்தவில்லை

மறுமதிப்பீட்டு க/கு, முதல் க/கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

*******